கலைஞானி கமலின் பேச்சும் அதையொட்டிய விமர்சனங்களும்!

கலைஞானி கமல் கன்னடத்தைப் பற்றி என்ன சொல்லிவிட்டார்? தமிழிலிருந்து பிறந்தது கன்னடம் என்று கூறிவிட்டார். இது ஒரு பெரிய சர்ச்சையாக நீடித்துக் கொண்டு இருக்கிறது. அவர் மொழியியல் அறிஞர் இல்லைதான். ஆனால் அறிஞர்களின் கூற்றைத் திரும்பச் சொல்லலாம் அல்லவா? அப்படித்தான் கமல் தனது கருத்தை எடுத்து வைத்தார். இதற்கு மன்னிப்பு எப்படிக் கோருவது? எதற்காக மன்னிப்புக் கோருவது? நமக்குப் புரியவில்லை.

தென்னிந்திய மொழிகளுக்கிடையே 'ஓர் உறவு இருக்கிறது' என்பதைச் சென்னையின் கலெக்டராக இருந்த பிரான்சிஸ் ஒயிட் எல்லீஸ் அதனை ஆய்வு செய்து 1816இல் முதன் முதலாகச் சொன்னார். இதனை 200 ஆண்டுகளாகப் பல ஆய்வாளர்கள் செழுமைப் படுத்திக் கொண்டே வந்தார்கள். ஜவகர்லால் நேருவும் தமது மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் இந்தக் கருத்தை வேறு வார்த்தைகளில் எழுதுகிறார். அவரை மொழியியல் அறிஞர் இல்லை, எப்படி அவர் இதை எழுதலாம் என்று சொல்லிவிட முடியுமா? அவர் ஒரு வரலாற்று ஆசிரியர் அல்லவா?

கமல் 'தக்லைப்' என்றொரு படத்தை அவர் நடித்து வெளியிட்டு இருக்கிறார். அதற்கான விழா ஒன்று பெங்களூரூவில் நடந்தது. அதில்தான் கன்னடம் பற்றி அவர் பேசினார். கமலின் பேச்சினால் அந்தப் படம் கர்நாடக மாநிலத்தில் வெளியிட முடியாமல் ஆயிற்று. ஆகவே படத்தை வெளியிட படத் தயாரிப்பாளர் கர்நாடக உயர் நீதிமன்றத்தை அணுகினார்.

ஏன் அவர்கள் நீதிமன்றத்தை அணுகினார்கள்? நீதிமன்றத்தின் மூலம் வந்தால் நாங்கள் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று கர்நாடக அரசு சார்பில் சொல்லப்பட்டது. ஆகவேதான் தயாரிப்பாளர் நீதிமன்றம் சென்றார். ஆனால் நீதிமன்றம் கமல் மன்னிப்புக் கேட்டால் என்ன தவறு? கமல் என்ன மொழியியல் அறிஞரா? என்று கேட்கிறது. இது நமக்குப் பெருத்த வியப்பையும் அதிர்ச்சியும் ஏற்படுத்திவிட்டது.

கர்நாடக நீதிமன்றம் ஆழமாக விசாரணையை மேற்கொண்டு இருக்க வேண்டும். ஒரு குடிமகன் ஓர் ஆய்வு கருத்தைப் பொதுவெளியில் கூறுகிறார். அது 200 ஆண்டுகள் பயிலப்பட்டு வந்த கருத்து. அதன் மீது வழக்கு வருகிறபோது நீதிமன்றம் 'தன்னிலை இழந்து' செயல்பட்டதை நம்மால் வியப்பாகவும் அதிர்ச்சியாகவும் தான் பார்க்க முடிகிறது.

தென்னிந்திய மொழிகளுக்கிடையே உள்ள 'ஓர்மை'யைக் கொண்டுதான் ஒரு காலத்தில் திராவிட இயக்கம் 'திராவிட நாடு' என்கிற தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தியது. அந்த 'ஓர்மை' ஒரு கருத்தியல் ஆயிற்று. கருதுகோள் ஆயிற்று, ஓர் அரசியல் இயக்கத்தின் இலட்சிய முழக்கமாயிற்று.

மேலும் பெரியார் கன்னடம், கர்நாடகத்தில் பேசுகிற தமிழ், தெலுங்கு, ஆந்திராவில் பேசுகிற தமிழ், மலையாளம் கேரளாவில் பேசுகிற தமிழ் என்றார். அதன் பெரும்பாலான சொற்களை அடையாளம் கண்டு அவ்வாறு அவர் எடுத்துரைத்தார். சமஸ்கிருத கலப்பும் ஒலியும் அம்மொழிகளைத் தமிழிலிருந்து வேறுபடுத்திக் காட்டின.

எடுத்துக்காட்டிற்கு இரண்டு சொற்களை மட்டும் பார்ப்போம். (1) தண்ணீர்: நீர் (தமிழ்) நீலு (தெலுங்கு), வெள்ளம் (மலையாளம்), நீரு (கன்னடம்) (2) வீடு: இல்லம் (தமிழ்), இல்லு (தெலுங்கு) வீட் (VEETமலையாளம்), பீடு (BIDUகன்னடம்)

இப்போது சொல்லுங்கள், இந்த நான்கு மொழிகளுக்கு இடையே உறவு இருக்கிறதல்லவா? இதனைத் தான் கமல் சொல்லி இருக்கிறார். தமிழ்ச் சொற்களுக்கும் இதர மூன்று மொழிக்கும் அடிப்படை வேறுபாடு என்ன, ஆராயலாமே.

இந்தக் கட்டுரையாளர் மொழியியல் ஆய்வாளர் அல்ல. அரசியல் கட்சி ஏட்டின் எழுத்தாளர். திராவிட இயக்க அரசியல் கல்வியை நாளும் கசடறக் கற்பதில் ஈடுபாடு உடையவர். திராவிடக் கருத்தியலுக்கு வலு சேர்ப்பதற்கு இவற்றையெல்லாம் பெருந்தலைவர்கள் பரப்புரை செய்வர். எழுதுவர், அவற்றை மனத்திடை தேக்கி செயல்படுவர். அவ்வளவே இக் கட்டுரையாளரின் தகுதி.

இந்தக் கருத்தைச் சொல்வதற்கு மொழியியல் கற்க வேண்டியதில்லை. ஆனால் மொழி வல்லுநர்கள்தான், இதன் அடிப்படையில் இருப்பவர்கள் ஆவர். இவற்றையெல்லாம் அறிந்தே கமல் பொதுவெளியில் 'தமிழிலிருந்து கன்னடம் பிறந்தது' என்று கூறியிருக்கிறார். இது தவறு இல்லை. பிழை இல்லை. அவர் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை.

கமலின் பேச்சுக் குறித்து ஆங்கில இந்துவிலும் தினமணியிலும் ஜூன் 9 ஆம் தேதி இரண்டு கட்டுரைகள் வெளியாகி இருந்தன. ஆங்கில இந்துவில் எழுத்தாளர் பெருமாள் முருகன் எழுதியிருந்தார். தினமணியில் அதன் 'ஆஸ்தான எழுத்தாளர்' கோதை ஜோதிலட்சுமி எழுதி இருக்கிறார். ஜனசக்தி வார ஏடு தலையங்கம் எழுதி இருந்தது. குமுதம் ஒரு கட்டுரையை வெளியிட்டு இருந்தது.

இவ்வேடுகளில் எழுதியவர்கள் எல்லாம் கமலின் பேச்சுக்கு தத்தமது கருத்துகளைப் பதிவு செய்து இருக்கிறார்கள். முதலாவதாக பெருமாள் முருகன் என்ன சொல்ல வருகிறார் என்பதைப் பார்ப்போம். அவரும் நாம் அறிந்தவரை மொழியியல் அறிஞர் இல்லை. ஆனால் ஒரு எழுத்தாளர், இலக்கியவாதி, கருத்தாளி தனது கருத்தைச் சொல்ல வருகிறார் என்கிற போது அதை ஆங்கில இந்து மதித்து வெளியிடுகிறது.

பெருமாள் முருகன் சொல்கிறார்: (1) "கமல் தமிழிலிருந்து கன்னடம் பிறந்தது என்று சொன்னதினால் அவருக்கு கன்னடத்தை அவமதிக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை. கமல் பேசுகிற போது கன்னட நடிகர் சிவகுமார் மேடையில் இருந்தார். கமல் குடும்ப உறவு என்கிற பெருமிதத்தோடுதான் பேசினார். தமிழும் கன்னடமும் உறவுள்ள மொழிகள் என்பதை எடுத்துக் கூற முயன்றார். நம்முடைய இந்த மொழிகள் சகோதர உறவுள்ள மொழிகள் என்றார். அவர் நோக்கம் என்பது கன்னடத்தின் 'மூலம்' தமிழ் என்பதே. இது தமிழ்ச் சிந்தனையாளர்களின் ஒரு சாராரின் எண்ணத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது. அந்தக் காரணங்களுக்காக கமல் அய்யங் கொள்ள வேண்டியதில்லை. அவர் அவரது கருத்தை பொதுவெளியில் வெளியிட சுதந்திரமுடையவர்"

(2) "இந்தி எழுத்தாளர் கீதாஞ்சலி ஸ்ரீ 2022 ஆம் ஆண்டிற்கான சர்வதேச புக்கர் பரிசைப் பெற்றார். இந்த ஆண்டு கன்னட எழுத்தாளர் பானு முஸ்தாக் சர்வதேச புக்கர் விருதை வென்றார். இத்தகைய சர்வதேச உயரத்திற்குச் செல்வதற்குத் தமிழுக்கும் தகுதி இருக்கிறது"

(3) "வலுவான ஆதாரமில்லாமல் ஆய்வாளர்கள் தமிழ்மொழியை எல்லா மொழிகளின் மூலமொழி என்று கூற முடியாது"

(4) "கமல் மன்னிப்புக் கேட்கவில்லை" 'என்னுடைய கருத்துப் பிழையானது இல்லை. அது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுவிட்டது.' என்றே கமல் கருத்துத் தெரிவித்து இருந்தார். பொதுவாகத் திரைப்பட உலகில் பிரச்சினைகள் எதுவும் எழுந்தால் மன்னிப்புக் கேட்டுவிட்டு படம் திரையிடப்பட்டுவிடும். திரைப்பட உலகத்திலிருந்து முதல் முறையாக மன்னிப்பு கேட்க மாட்டேன் என்று சொல்வது கமல் மட்டுமே என்று கூறுகிறார்கள்."

(5) "ஒரு நபர் தனது கருத்தை எடுத்துச் சொல்வதற்காக உரிமையுடையவர் ஆவார். அந்தக் கருத்துச் சரியானது என்று அவர்கள் நம்பினால் அதன் மீது உறுதியுடன் இருக்கலாம். ஜனநாயகத்தில் அத்தகைய கருத்துகளுக்கு எதிர்க்குரல் எழக்கூடும். ஆனால் பலாத்கார மிரட்டல்கள், மற்றவர்களின் வாழ்வுரிமையை மறுப்பது போன்றவை தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களாகும்"

(6)"நீதிமன்றம் இத்தகைய பிரச்சினைகளையெல்லாம் சுதந்திரமாகப் பேசும் பேச்சாகக் கருத வேண்டும். குறிப்பிட்ட பேச்சால் யாராவது மனம் புண்பட்டதாகச் சொல்வார்களானால் அதன் அளவுகோல் என்ன?"

இவைதான் பெருமாள் முருகனின் கட்டுரையில் நாம் சாரமாகப் பார்ப்பது ஆகும். நம்மைப் பொருத்தவரை அவர் கட்டுரையிலிருந்து நாம் தெரிந்து கொண்டது நான்கு விஷயங்கள் ஆகும்.

(1) கமல் பேசியது ஒரு சார்பு தமிழ்ச் சிந்தனையாளர்களின் கருத்து. ஆனாலும் அவர் அக்கருத்தைச் சொல்வதற்கு உரிமையுடையவர் ஆகிறார். அவருக்கு அக்கருத்தின் மீது நம்பிக்கையும் உறுதியும் இருக்க வேண்டும். கமல் பேசியது சரி; தவறு என்று பெருமாள் முருகன் எதுவும் சொல்லவில்லை.

(2) தமிழ்மொழி உலக மொழிகளுக்கெல்லாம் மூலம் என்பதை ஒப்புக் கொள்ள பெருமாள் முருகன் ஒரு கருத்தைக் கூறி இருக்கிறார்.

(3) தமிழ்ச் சிந்தனையாளர்களின் மற்றொரு வகையினர் உள்ளதைப் பெருமாள் முருகனின் கட்டுரை வெளிப்படுத்துகிறது. எனவே இவர் எந்த வகையினரை ஆதரிப்பவர் என்பதை சொல்லாமல் சொல்வதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. கட்டுரையில், 'சுதந்திரம் வேண்டும் பேச, எழுத...' மட்டுமே தெரிகிறது.

(4) இந்தியிலும் கன்னடத்திலும் இரண்டு எழுத்தாளர்கள் புக்கர் பரிசு சர்வதேச உயரத்தில் பெற்று விட்டதைப் பெருமாள் முருகன் எழுதியிருக்கிறார். இது தமிழில் அவருக்குப் புக்கர் பரிசு அளிக்க வேண்டும் என்று கேட்பது போல் இருக்கிறது. மொழியியல் கதையல்ல. அதுவும் ஒரு அறிவியல்.

பெருமாள் முருகனைத் தெரிந்து கொண்டோம்.

★ ★ ★ ★ ★

தினமணி 'ஆஸ்தான எழுத்தாளர்' கோதை ஜோதிலட்சுமி 'நமது மொழி வேற்றுமையில் ஒற்றுமை!' எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இந்த அம்மாள் பாரதவர்ஷத்தை தனது ஞானக்கண்ணால் தரிசித்து எழுதுபவர். ஊனக்கண் இல்லாதவர். வேதம் முதல் பெரிய வாச்சான் பிள்ளை உரை வரை விளக்கும் ஆற்றல் பெற்றவர். ஞானமளந்த மேன்மையர், இவரின் கட்டுரையில் கமலைப் பற்றியோ, அவர் பேசியது பற்றியோ, 'தக்லைப்' பற்றியோ எதுவும் இல்லை. ஆனால் பெருமாள் முருகனுக்குக் கூட இந்தத் திறன் கிடைக்க வாய்ப்பில்லை, கட்டுரையை மட்டும் கனிமொழி கருணாநிதி எம்.பி., 'இந்தியாவின் மொழி வேற்றுமையில் ஒற்றுமை' என்று கூறியதை வைத்துக் கட்டுரையைத் தொடங்கியுள்ளார்.

கட்டுரையில் இந்த அம்மாள் ஆங்காங்கே அவரது கருத்தை வலியுறுத்தி இருப்பார். அந்தக் கருத்து அவரின் முக்கிய கொள்கைகளுக்குப் பொருத்தமில்லாதவையாகக் கூட இருக்கும். அதைப் பற்றியெல்லாம் இத்தகைய கட்டுரையாளர்கள் கவலைப்படமாட்டார்கள். கட்டுரையில் விரவியுள்ள அந்த அம்மாளின் கருத்துகளைத் தொகுத்து கீழே கொடுத்து இருக்கிறோம். அடைப்பில் நமது கருத்தையும் கூறியிருக்கிறோம்.

(1) "மொழியை இழப்பது இனத்தின் அடையாளத்தை இழப்பதற்கு சமம்" (மொழியை அழித்துத் திணிக்கிற வேலையை யார் செய்கிறார்கள்? மொழியை அழித்தால் இனம் அழிந்து போகும் என்று பேசியவர் ஜகதீப் தங்கர் அல்லவா? அந்த பா.ஜ.க.வை ஆதரிக்கும் எழுத்தாளர்தான் இந்த அம்மாள்)

(2) "எந்த மொழியையும் விமர்சிக்கும் உரிமை எவருக்கும் இல்லை" (கமல் விமர்சிக்கவில்லையே மொழிக்குள்ள ஒத்த நிலையை, சகோதர உறவை வெளிப்படுத்தினார்)

(3) "2004 ஆம் ஆண்டு செம்மொழியாகத் தமிழ் அங்கீகரிக்கப்பட்டது. அதன் பின் சமஸ்கிருதம் கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஒடியா மொழிகளும் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டன."

(தமிழைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நுழையவிடாமல் செய்தனரே. சமஸ்கிருதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டதே. பார்க்க: தமிழ் மறுமலர்ச்சியும் திராவிடத் தேசியமும் கு.நம்பிஆரூரன்)

(4) "அரசியல்வாதிகள் மொழியை ஒரு சக்தி வாய்ந்த கருவியாகப் பயன்படுத்துகின்றனர். பிறமொழி பேசுவோரின் மனம் புண்படப் பேசுவது அறிவுடைமையல்ல. 'என்னுடைய மொழியிலிருந்து உன்னுடைய மொழி' என்பதெல்லாம் அவசியமற்ற அரசியல்"

(மொழி சக்தி வாய்ந்ததுதான். அம்மாள் மனம் 'புண்படும்படி பேசுவது' என்று குறிப்பிட்டு இருக்கிறாரே. அதன் அளவுகோல் என்ன என பெருமாள் முருகன் கேட்கிறாரே. அம்மாள் பதில் சொன்னால் நல்லது. கமல் என்னுடைய மொழியிலிருந்து உன்னுடைய மொழி என்று பேசவில்லை. 200 ஆண்டு ஆய்வின் வெளிப்பாட்டையே அவர் எடுத்துரைத்தார்)

(5)"வேற்றுமையில் ஒற்றுமை என்பதே நமது அடையாளம். அதில் ஒருவருக்கு ஒருவர் சகோதர உறவு பாராட்டலாமே தவிர, எஜமானர் முறை பேசமுடியாது"

க.திருநாவுக்கரசு
திராவிட இயக்க ஆய்வாளர்

(கமலின் பேச்சில் எஜமானர் தோரணையோ அத்தகைய எண்ணத்துடன் பேசிய பேச்சாகவோ அது தெரியவில்லை. கமலின் பேச்சின் மூலம் 'திராவிட வாசனை' பூண்டு, வெங்காயம் போல் அம்மாளுக்கு நெடியாய் ஏறிவிட்டது. அந்த ஒவ்வாமைக்கு நாம் என்ன செய்ய முடியும்?)

இப்படிக் கமல் பெயரையோ நிகழ்வையோ குறிப்பிடாமல் கமலின் பேச்சை மறைமுக தாக்கி கோதை ஜோதி லட்சுமியின் கட்டுரையைத் தினமணி வெளியிட்டு இருக்கிறது.

★ ★ ★ ★ ★

குமுதம் வார ஏடு (18.06.2025) கமல் பிரச்சினையை எழுதியிருக்கிறது. அதற்குத் தலைப்பு, "தக்லைப் பிக் பாலிடிக்ஸ்....கன்னடமா, தமிழால் சிக்கிய கமல்" என்று போட்டு இருக்கிறது. உள்ளே 'சீரியசாக' ஒன்றும் எழுதவில்லை. சிக்கலைப் பதிவு செய்து இருக்கிறது. அவ்வளவுதான்.

★ ★ ★ ★ ★

ஜன சக்தி வார ஏடு இப் பிரச்சினையை பொறுப்போடு சற்று ஆழமாக எழுதியிருக்கிறது. அதன் கருத்தை அப்படியே நாம் வெளியிட்டு இருக்கின்றோம்.

ஜனசக்தி எழுதுகிறது:

"அரசியல் கட்சியைத் துவங்கிய கமலஹாசன், பலமொழிகளில் வெளியாகும் தனது படம் பற்றிய அறிமுக விழாவில், தமிழின் மகள் கன்னடம் என்று கூறிவிட்டார்.

திராவிட மொழிகள் அனைத்தும் சகோதர மொழிகள் தான். ஒருவேளை அச்சுமுறையும், பத்திரிகைகளும், திரைப்படமும் தோன்றி நம்மை இணைக்காமல் போயிருந்தால், இப்போது நெல்லையிலும், மதுரையிலும், கோவையிலும், சென்னையிலும் நாம் வேறு வேறு மொழிகளைப் பேசிக் கொண்டு இருந்திருக்கலாம்!

ஆனால் கமலஹாசன் பேசியதில் நாம் எல்லோரும் உறவுகள்தான் எனும் நல்லெண்ணம் தொனித்ததே தவிர, எந்த ஒரு மொழியையும் உயர்த்த வேண்டும் அல்லது தாழ்த்த வேண்டும் என்ற உள்நோக்கம் ஏதும் இல்லை.

ஆனால் இதை ஒரு ஆயுதமாக பா.ஜ.க. பற்றிக் கொண்டது. கன்னட மொழியைத் தாழ்த்தி விட்டதாக ஆரவாரக் கூச்சல் எழுப்பியது.

காங்கிரஸ்காரரான கர்நாடகா முதல்வர் சித்தராமையாவைச் சிக்கலில் மாட்டியது. அவர் பேசாமல் இருந்தால், கன்னட மொழிக்கு எதிரானவர் என்று தூற்றலாம். கமலஹாசனைக் கண்டித்தால், தமிழ்நாட்டுக்கும் கர்நாடகாவுக்கும் இடையிலான உறவை மேலும் சீர்கெடுக்கலாம். ஏதொன்றும் பா.ஜ.க.வுக்கு நல்லது.

அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டு முதல்வர் ஏன் வாய் திறக்கவில்லை என்று இங்கும் சங்கிகள் கூக்குரலிடுகின்றனர். எப்படியேனும் தகராறு முற்ற வேண்டும். அடையாள அரசியல் முற்றினால், இப்படித்தான் அது எதிரியின் கைகளில் ஆயுதமாகும்!

இந்தியாவின் பன்மைத் தன்மையை ஒழித்துக் காவி பூசுகிற, மாநில உரிமைகளைப் பறித்து அதிகாரங்களை எல்லாம் டெல்லிக்குக் கொண்டு சேர்க்கிற பா.ஜ.க.வின் வல்லாதிக்கத்தை, எதிர்த்து நிற்கும் சக்திகளிடையே உட்பகையை உருவாக்கி பலவீனப்படுத்தும் பா.ஜ.க.வின் தொடர் முயற்சியின் இன்னொரு பக்கமே இது!

இது பற்றிய வழக்கை விசாரித்த கர்நாடகா உயர்நீதிமன்றம். நீங்கள் என்ன மொழியியல், வரலாற்றியல் வல்லுநரா என வினவி, மன்னிப்புக் கேட்டால் தீர்ப்பளிப்பதாகச் சொன்னது விசித்திரமாக இருக்கிறது. தவறாகப் பேசியிருந்தால் மன்னிப்பு கேட்பதில் தயங்க வேண்டியதில்லை. ஆனால் தவறாகப் புரிந்து கொண்டோம் மன்னிப்பு கேள் என்பது கீழ்மைப்படுத்துவதாகும்.

மக்களை ஒன்றுபடுத்துகிற, அவர்களது விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் முன்னுரிமை தருகிற முற்போக்கு சக்திகள் பா.ஜ.க.வின் இந்த நரித்தந்திரங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

இப்படி ஒரு வரலாற்று ஆய்வை அவரது பேச்சில் கமல் வெளிப்படுத்தினார். அவர் கன்னட மொழியை அவமதிக்கவில்லை. தமிழுக்கும் கன்னடத்திற்கும் உள்ள சகோதர உறவை எடுத்துரைத்தார். இதில் எந்தத் தவறும் இல்லை. சில கட்சிகளும் பிறரும் அவர் பேசியதைப் பெரிதாக்கி தனது இருப்பிடத்தைக் காட்டிக் கொள்கிறார்கள். அவர்கள் இதில் வெற்றி பெற முடியாது. ஏனெனில் கமலின் பேச்சில் உள்ள உண்மையும் மெய்யும் கேட்கவும் பார்க்கவும் அறியக் கூடியதாகவும் இருக்கிறது. ●

திருச்சிராப்பள்ளி மாவட்டம் சத்திரம் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் (லிமிடெட்) திருச்சிராப்பள்ளி மண்டலத்தின் சார்பில் ஒரு மகளிர் விடியல் பயண புதிய பேருந்து மற்றும் நான்கு புதிய புறநகரப் பேருந்துகளை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், மாநகராட்சி துணை மேயர் திவ்யா, திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் சதீஷ்குமார், துணை மேலாளர்கள் த .சாமிநாதன், ரவி, போக்குவரத்து கழக பணியாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் ,உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர், செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் சிங்காரத்தோப்பில் இலவச கண் சிகிச்சை முகாமிக்கு கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை டாக்டர் பிரவின் ஐயப்பன் செய்திருந்தார். இந்த முகாமில் 500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர். அப்போது 250 க்கும் மேற்பட்டோருக்கு கண் கண்ணாடி போடுவதற்கு பரிந்துரை செய்த நிலையில், டாக்டர் பிரவீன் ஐயப்பன் தனது சொந்த செலவில் கண் கண்ணாடி வழங்கினார். மேலும் 40 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இதில் ஆதி பெருமாள் ரவிச்சந்திரன், ராஜசேகர், கர்ணன், கீர்த்தனா ஆறுமுகம், ராதிகா பிரேம்குமார், சுதாகர், சன்பிரைட் பிரகாஷ், ராமநாதன், பிரகாஷ், சம்பத், மார்க்கெட் பிரகாஷ், நடராஜன், நாகூரான், கலைமணி, மதன்ராஜ், ரவி, அரவிந்த், சதீஷ், யுவராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு–இரண்டு உறை முறையில் இனம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்

ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண்	10/கோ. மறுசீரமைப்புப் பணிகளின்–ஈரோடு– கரூர் /முவ.அ (வ6)/தபொ/கோவை /2025/ நாள். 10.06.2025
நிதி ஆதாரம்	மறுசீரமைப்பு நிதி 2025–26
ஒப்பந்தக்காரர் தகுதி	முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள்
ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர்	தலைமைப் பொறியாளர், த.கு.வ.வாரியம், 30–சிறுவாணி நகர், பாரதி பூங்கா சாலை, கோயம்புத்தூர்–641043.
ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் இணையதளம் மூலமாக	19.06.2025 முதல் 03.07.2025 பிற்பகல் 15.00 மணி வரை https://tntenders.gov.in (As per server time)
ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை	மின்னணு முறையில் இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக
ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக் கூட்டம்	26.06.2025 அன்று முற்பகல் 11.00 மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம், த.கு.வ.வாரியம், 30–சிறுவாணி நகர், பாரதி பூங்கா சாலை, கோயம்புத்தூர்–641043.
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	03.07.2025 அன்று 15.00 மணிக்குள் மின்னணு ஒப்பந்த முறையில் டிஜிட்டல் ஒப்பம் இடப்பட்டு இணையதளம் https://tntenders.gov.in மூலமாக.
ஒப்பந்தப்புள்ளி திறப்பு	04.07.2025 அன்று பிற்பகல் 15.30 மணிக்கு வ.எண்–01, 15.45 மணிக்கு வ.எண்–02 மற்றும் 16.00 வ.எண்–03 மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம், த.கு.வ.வாரியம், 30–சிறுவாணி நகர், பாரதி பூங்கா சாலை, கோயம்புத்தூர்–641043 மின்னணு ஒப்பந்த முறையில் திறக்கப்படும்.

வ. எண்	திட்டத்தின் பெயர்	பணியின் உத்தேச மதிப்பு (ச.ம.சேவை வரி 18 சதவீதம் உட்பட.)	முன் வைப்புத் தொகை
	ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் தற்போதுள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்தினை 2025–26 ஆம் ஆண்டிற்கான மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்துதல். (கட்டுமான பணி காலம் 06 மாதங்கள், சோதனை ஓட்டம் – 1 மாதம் மற்றும் கட்டணமில்லா பராமரிப்பு காலம் : 1 மாதம்)		
1.	ஈரோடு மாவட்டம் நல்லம்பட்டி பேரூராட்சி, பள்ளபாளையம் பேரூராட்சி, காஞ்சிகோயில் பேரூராட்சி, பெத்தம்பாளையம் பேரூராட்சி மற்றும் பெருந்துறை, பவானி ஒன்றியங்களில் உள்ள 4 பிற கிராம குடியிருப்புகளுக்கான, கூட்டுக் குடிநீர் திட்டத்தில் வெவ்வேறு விட்டம்முள்ள PSC/AC/PVC குழாய்களை DI/OPVC/HDPE குழாய்களாக மாற்றுதல், குழாய் தாங்கும் பாலம் அமைத்தல் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலைத்தில் HSC பம்ப்செட்டை மாற்றுதல்.	ரூ. 3.26 கோடி.	ரூ. 2.45 இலட்சம்
2.	ஈரோடு மாவட்டம், கூகலூர் பேரூராட்சி, அத்தாணி பேரூராட்சி மற்றும் அந்தியூர் மற்றும் கோபிசெட்டிப்பாளையம் ஒன்றியத்தில் உள்ள 5 பிற கிராமப்புற குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் AC குழாயை O-PVC மற்றும் HDPE குழாய்களாக மாற்றுதல், மின் இயந்திரப் பணிகள் மற்றும் மிதமணல் வடிகட்டி தொட்டிகளில் பழுது பணிகள் செய்தல்.	ரூ. 2.05 கோடி.	ரூ. 1.54 இலட்சம்
3.	கரூர் மாவட்டம் பள்ளப்பட்டி நகராட்சி மற்றும் அரவக்குறிச்சி பேரூராட்சி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் அரவக்குறிச்சி தரைதள தொட்டி முதல் பள்ளப்பட்டி தரைதள தொட்டி வரை 350 மிமீ PSC குழாயை 315 மிமீ O-PVC குழாய்களாக மாற்றுதல் மற்றும் நீர் சேகரிப்பு கிணற்றில் 160 மீட்டர் (4 எண்ணம் தலா 40 மீட்டர்) நீளமுள்ள ரேடியல் ஆர்ம்களை அமைத்தல்.	ரூ. 3.25 கோடி.	ரூ. 2.44 இலட்சம்

செ.ம.தொ.இ/ 3030 /ஒப்பந்தப்புள்ளி/2025
தலைமைப் பொறியாளர் (பொ), த.கு.வ.வாரியம், கோவை.
தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்